சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. **274 / 2018**

பெயர்: தங்கதுரை ம.சா. 1 தேதி **10.03.2026**

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1. விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு சொந்தமானது. மேற்படி இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு உள்ளதா என்றால் இல்லை. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று இல்லை. விபத்து நடந்த சாலை கிழமேல் சாலை. அந்த கிழமேல் சாலையில் தெற்கு புறமாக செல்லும் கிளை சாலை வளைந்து செல்லும். நான் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்தேன். கிழமேல் சாலையில் இருந்து தெற்குபுறமாக பிரியும் பிரிவு சாலையில் சந்திக்கின்ற இடத்தில் தான் விபத்தானது நடைபெற்றது. பொதுவாக சாலையின் ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்காக வரவேண்டும் என்றால் சரிதான். நான் கட்ரோட்டில் திரும்பி மீண்டும் கிழக்கு நோக்கி வரும்பொழுது தான் விபத்து ஏற்பட்டது. போலீசார் தயாரித்த வரைபடத்தில் சாலையின் மையபகுதிக்கு தென்பகுதியில் தான் விபத்து நிகழ்ந்ததாக காவல் துறையினர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டியின் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விபத்துகுறித்து காவல் துறையில் எனது சகோதரர் சந்திரசேகர் புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

2. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு காவல் துறையினர் மேற்கொண்ட விரிவான விசாரணையை எனது சகோதரர் விபத்து குறித்து தவறான தகவல் கொண்டு காவல் துறை வசம் புகார் கொடுத்துள்ளார் எனவும், மனு விபத்திற்கு முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் எந்தவிதத்திலும் தவறு இல்லை என கூறி பொருண்மை தவறு என குற்ற வழக்கு முடிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. போலீசார் விபத்து சம்மந்தமாக விசாரித்தார்கள். வழக்கு பற்றி நான் விசாரிக்கவில்லை. மனு விபத்திற்கு முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் எவ்விதத்திலும் காரணம் இல்லை என்பதாலும், எனக்கு எவ்வித இழப்பீடும் இரண்டாவது எதிர்மனுதாரர் வழங்க சட்டப்படி கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணியவில்லை. மேற்படி விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனமும், இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. குற்ற வழக்கில் மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை. அதனை தாக்கல் செய்தால் என்மீது உள்ள

தவறு தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இரண்டாவது எதிர்மனுதாரரை பொறுத்து மனுவானது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.10 17:18:36 +0530

சார்பு நீதிபதி
குளித்தலை.